IV

ஆண்டு, 1929

7L
Y31ma2,N26
N29.4.81
199385

Regd. No. M. 2475. Vol IV—8

18 SEP 1929

"கிராம அபிவிருத்தி"

# ரூரல் இந்தியா

(பாரேஸ்டு பஞ்சாயத்து பத்திரிகை.)

எடிடர், மானேஜர்—எ. ஸ்வாமிநாதய்யர், ரிடையர்ட் டிப்டி கலெக்டர்
ஆபீஸ் : 22, ப்ராடீஸ் ரோட், மைலாப்பூர், மதராஸ்.

வால்யூம் IV ஆகஸ்டு, 1929 [நெ. 8,

## பொருளடக்கம்.


| நெ | | பக்கம் |
|---|---|---|
| 64. | கிராமச் சீரமைப்பு முயற்சிகளைப் பற்றின குறிப்பு. | 175 |
| 65. | கிராமச் சஹாயத்தொழில் குறிப்பு. | 177 |
| 66. | எக்காலக் கண்ணிகள். | 179 |
| 67. | செடிவர்க்கங்களின் விஷயங்கள். | 180 |
| 68. | நில அடமான பாங்கிகள். | 187 |
| 69. | விவசாய வழிகளில் ஆராய்ச்சி. | 189 |
| 70. | இந்திய கிராமாந்தரங்களின் ரஸ்தா சௌகரியங்கள். | 191 |
| 71. | அயர்லாந்தில் நடைபெறும் கிராமச் சீரமைப்பு முயற்சிகள். | 192 |
| 72. | வர்த்தமானக் குறிப்பு. | 197 |
| 73. | மாமிச உணவு. | 199 |
| 74. | நாசம் இல்லை. | 199 |



| | | |
|---|---|---|
| வருடச் சந்தா : | உள்நாடு ரூ 3 | வெளிநாடு ரூ 4 8 0 |
| தனிப்பிரதி : | ,, அணா 6 | ,, அணா 8 |

**80-வருஷ காலமாக உலக பிரசித்திபெற்ற**

காரம்
மணம்
நிறம்
குணம்
வாடை
உள்ளது.

# அசல்



# ஷண்முகம்

# பட்டணம்பொடி

அநேக
மெடல்கள்
நற்சாட்சி
பத்திரங்கள்
பெற்றது.

**ஷண்முகம் மூக்குத்தூள் கம்பெனி லிமிடெட்,**
**போஸ்டு பாக்ஸ் 140. மதுரை**

80 வருஷகாலமாக சென்னையிலே, சிறப்பு வாய்ந்த ஆயிரக் கணக்கான நற்சாக்ஷிப்பத்திரங்கள் பெற்று தினசரி லெட்டர்களால் புகழ்பெற்று அன்றாடம் நூற்றுக்கணக்கான பார்சல்களை சோல் ஏஜண்டுகள் தினந்தோறும் மெயிலில் பெற்று, ஜில்லா, தாலூக்கா, டவுன் கிராமம் முதல் குக்கிராமங்களிலும் கொண்டாடி, அசல் சேப்ரோல் வாடை, அசல் பசுநெய் மணம், குளிர்ந்த குணம், இன்புறும் காரம், பவுன் நிறம் இவ்வைந்தும் ஒருங்கே இசையப்பெற்று நமது ஏஜண்டுகளுக்கு நற்கியாதி தந்து வியாபாரிகளுக்கு நற்பெயரளித்து உபயோகப்படுத்திய கனவான்களுக்கு மனோபீஷ்டம் தந்து இந்தியாவில் ஏராளமாக செலவாகிவருவது எது? எங்கள் அசல் ஷண்முகம் பட்டணம் பொடியே. இனிமேலாவது ஏமார்ந்து போகாமல் எங்கள் அசல் ஷண்முகம் பொடியை வாங்கி உபயோகப்படுத்தி இன்புறுங்கள்.

அசல் ஷண்முகம்பொடி விலை ஜாபிதா.

முதல்தரம் ஒரு வீசை ரூ 4-4-0 இரண்டாந்தரம் ரூ 3-4-0

டாக்டர் ஆர். கே. பரிமள மூக்குத்தூள்.

இதனால் ஜலதோஷம், ஒற்றைத்தலைவலி, மண்டைக்குத்தல், உள்படக் கண்டத்திற்கு மேற்பட்ட 103 சகல வியாதிகள் வெகு சீக்கிரத்தில் கண்டிக்கப் படுமென்பதில் சந்தேகமே கிடையாது. காலணா சாதா மூக்குத்தூளுடன் இந்தத்தூள் இரண்டொரு சிட்டிக்கை மாத்திரம் கலந்தால் தூள் முழுதும் சுகந்தமாய்விடும்.

| | விலை | | | தபால் கூலி | | | பாக்கிங் | | | தொகை | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 3 புட்டி | 0 | 9 | 0 | 0 | 4 | 0 | 0 | 1 | 0 | 0 | 14 | 0 |
| 6 புட்டி | 1 | 2 | 0 | 0 | 5 | 0 | 0 | 1 | 0 | 1 | 8 | 0 |
| 12 புட்டி | 2 | 4 | 0 | 0 | 8 | 0 | 0 | 1 | 0 | 2 | 13 | 0 |

# ரூரல் இந்தியா

(பாரேஸ்டு பஞ்சாயத்து பத்திரிகை.)

எடிடர், மானேஜர்—எ. ஸ்வாமிநாதய்யர், ரிடைர்ட் டிப்டி கலெக்டர்,

ஆபீஸ் : 22, ப்ராடீஸ் ரோட், மைலாப்பூர், மதராஸ்.


18 SEP 1929 MADRAS

வால்யூம் IV | ஆகஸ்டு, 1929 | [நெ 8

## கிராமச் சீரமைப்பு முயற்சிகளைப் பற்றின குறிப்பு.

கனம். ராமதாஸ் பந்துலு அவர்கள் நம்முடைய மாகாணத்தில் 6 ஊர்களில் கிராமச் சீரமைப்பு வேலைகளையாரம்பிக்க உத்தேசித்திருக்கிறாரென்று முன் சஞ்சிகையொன்றில் குறிப்பிட்டோம். அவ்வேலைகளின் நிமித்தம் சென்னை செண்டிரல் அர்பன் பாங்கும் அந்தந்த ஜில்லாவைச்சேர்ந்த கோ ஆபரேடிவ் பாங்குகளும் வருஷம் ஒன்றுக்கு 1000 ரூபாய் வீதம் பணவுதவி செய்ய ஒப்புக்கொண்டிருக்கின்றனவாம். சென்னை மாகாணக்கூட்டுறவு ஐக்கியம் இந்த ஸ்தாபனங்களின் வேலைகளை மேல் பார்வையிட ஒப்புக்கொண்டிருக்கிறதாம். ஒவ்வொரு ஊரிலும் பயிர்ச்சி செய்யப்பட்ட ஒரு ஊழியர் இவ்வேலைகளை நடத்துவாராம். கூட்டுறவுச்சங்கங்களைச் சரியான நிலையில் அமைப்பதும், பஞ்சாயத்துகளை நிர்மாணஞ்செய்து அவைகளை கிராம ஆரோக்கிய விஷயங்களையும், ரஸ்தாக்கள், கல்வி, இவ்விஷயங்களையும் கவனிக்கும்படி செய்தலும், வயது வந்தவர்களுக்கு கதைகள், உபந்யாஸங்கள் இவைகளின் மூலமாய் போதனைகளைச் செய்தலும் வியவஸாய முறைகளில் நிரூபணங்களைச் செய்தலும், சிறுவர்களுக்கு தேகப்பயிர்ச்சி வழியில் ருசியையுண்டாக்குவதும், இவ்வூழியர்களின் வேலைகளாம். சேலம் ஜில்லாவில் திவான் பஹதூர் ஆர். ராமச்சந்திர ராவ் அவர்களின் முயற்சிகளால் இவ்வேலை பிரபலமாய் ஆரம்பித்து நடைபெறுகிறது. தென் ஆர்காடு ஜில்லாவில் திருப்பாச்சனூரில் வெகு குதூஹலத்துடன் வேலை ஆரம்பிக்கப்பட்டது. ராவ்பகதூர் சீதாராம ரெட்டியார் அவர்களும் இன்னும் அநேக கனவான்களும் அம்ம

ஹொராச்சவத்திற்கு விஜயம் செய்திருந்தனர். ஸர்வண்ட்ஸ் ஆப் இந்தியா ஸங்கத்தைச் சேர்ந்த ம-ள-ள-ஸ்ரீ வெங்கடசுப்பய்யா அவர்களும் போயிருந்தாராம். அவரும அழைப்பிலிருந்து சென்ற ம-ள-ள-ஸ்ரீ ஸத்திய நாராயண அவர்களும் வந்திருந்த ஜனங்களுக்கு கிராமச்சீரமைப்பு வேலைகளைப்பற்றி வெகு தெளிவாக உபந்நியஸித்தார்களாம்.

மேற்கு கோதாவரி ஜில்லாவைச்சேர்ந்த தாடேபல்லி கூடம் தாலூகா போர்டில் போர்ட்டு ஸ்கூல் உபாத்தியாயர்களைக் கிராமச்சீரமைப்பு வேலைகளில் பயிர்ச்சி செய்வதற்காக ஒரு கோடை ஸ்கூல் ஏற்படுத்தப்பட்டு இருக்கிறது. 80 உபாத்தியாயர்கள் போதனைகளை அடைகிறார்கள். போதனைகள் முடிந்தபின் அவர்களுக்கு ஒரு பரீக்ஷையுண்டாம். அதில் தேறினவர்களுக்கு ஸர்டிபிகேட்டுகள் கொடுக்கப்படுமாம். தேறினவர்கள் பஞ்சாயத்துகளில் குமஸ்தாவேலையையும் செய்யும்படி நியமிக்கப்படுவார்களாம் அவர்களுக்கு உபாத்தியாயச் சம்பளத்துடன் ரூபாய் நாலுவீதம் மாதம் ஒன்றுக்கு அல்லவன்ஸு கொடுக்கப்படுமாம்.

தாடேபல்லிகூடம் தாலூகா போர்டின் அக்ராஸனாதிபதியாகிய ம-ள-ள-ஸ்ரீ கே. ரங்காராவ் அவர்களின் முயர்ச்சிகளால்தான் இப்பள்ளிக்கூடம் உண்டாக்கப்பட்டது. இவருடைய ஊழியத்தை இதர தாலூகா போர்டு அக்ராஸனாதிபதிகள் பின்பற்றுவார்களாக.

## கிராமச்சஹாயத் தொழில் குறிப்பு.

கோயம்புத்தூர் டவுன் திருச்சினாப்பள்ளி ரோட்டில் ஒய். எம். ஸீ. ஏயின் பிறிவுஸ்தாபனம் ஒன்றிருக்கிறது. இரண்டாவது மயில் கல்லிற்கு எதிரில் ஒரு பெரிய தோட்டத்தில் இந்தஸ்தாபனமிருக்கிறது. நமது ஊழியர்களில் ஒருவர் அந்தஸ்தாபனத்தை ஒரு மாதத்திற்குமுன் போய் பார்வையிட்டார். ஸ்தாபனத்தை நடத்துகிற மிஸ்டர் ஜெயகரன் வெகு சந்தோஷத்துடன் நமது ஊழியருக்கு அவ்விடத்தில் நடத்தப்படும் ஸஹாயத்தொழில் முயர்ச்சிகளை எல்லாவற்றையும் விவரித்துச் சொல்லிக்காண்பித்தார்.

கோழிவளர்ப்பு விஷயம் எடுத்துக்காட்டப்பட்டது. பலதேசத்திய திறமான தினுசுகோழிகள் ஒரு பெரிய ஒயர் பென்சு போடப்பட்ட ஸ்தலத்தில் வைக்கப்பட்டிருக்கின்றன. ஒவ்வொருதினுசிற்கும் தென்[illegible]தனிஸ்தலம் பென்சு போடப்பட்டு அதன் மத்தியில் அவைகள் போய் ராத்திரியில் தங்குவதற்கு ஒரு மரக்கூடு அமைக்கப்பட்டிருக்கின்றது. கோழிகள் நன்றாய் உலாவும்படியாய் இடங்கள் அமைக்கப்பட்டிருக்கின்றன. அவைகள் ஆஹாரத்தைத் தின்பதற்காக தக்க இடங்களும் அமைக்கப்பட்டிருக்கின்றன. ஒரு ஜாதி கோழிகள் மற்றொரு ஜாதி கோழிகளோடு புணராமல் இருக்கவேண்டிய நிமித்தம் தான் ஒவ்வொரு ஜாதியும் தனித்தனி ஸ்தலத்தில் அமைக்கப்பட்டிருக்கின்றது.

199385



கோழிகளின் நோய்களைத் தீர்ப்பதற்காக ஒரு ஆஸ்பத்திரியுமிருக்கிறது. நோய்களையுடைய கோழிகள் அவ்விடத்தில் ஒவ்வொன்றும் தனித்தனியாக வைக்கப்பட்டிருக்கின்றன. மனிதர்களுக்குப்போல் அவைகளுக்கும் சிகித்ஸைகள் நடத்தப்படுகின்றன. மனிதநோயாளிக்குப்போலவே கோழி நோயாளிகளுக்கும் சௌகரியங்கள் கொடுக்கப்பட்டு சிகித்ஸைகள் அநுஷ்டிக்கப்படுகின்றன.

இங்கிலாந்து கோழிகளின் முட்டைகள் நம்முடைய நாட்டுக் கோழிகளின் முட்டைகளைக்காட்டிலும் வெகு பெரிதானவைகளாகவும், கனமானவைகளாகவும் இருப்பது கவனிக்கப்பட்டது. இங்கிலாந்து தேசக்கோழிகளின் குஞ்சுகள் கிராம ஜனங்களுக்குக் கொடுக்கப்படுகின்றன. அவைகள் இடுகிற முட்டைகளை தக்க உயர் விலைக்குக் கிராம ஜனங்கள் விற்கக்கூடுகிறதில்லை யாதலால் கோயம்புத்தூர் ஸ்தாபனத்தாரே அவைகளை வாங்கிக்கொண்டு மார்கெட்டுகளில் விற்கிறார்கள்.

கோழிகள் குஞ்சுபொரிக்கிற காலத்தில் முட்டையிடுகிறதில்லை யாதலால் அவைகளை குஞ்சு பொரிக்கவிடாமல் முட்டைகளை ஒரு மேநாட்டு கருவியின்மூலமாக கோழிகளின் முயர்ச்சிகளில்லாமலேயே குஞ்சுபொரிக்கச் செய்கிறார்கள் மேலும், கோழிகள் கருயில்லாத முட்டைகளையு மிடுகிறபடியால் அவ்வித முட்டைகளைக் கண்டுபிடிக்க சாதனங்களையும் உடைத்தாயிருக்கிறார்கள்.

பிராம்மணரல்லாத பல ஜாதியார்களுக்கு கோழி முட்டை நல்ல உணவு ஆகையால் கோழிவளர்ப்பு கிராம ஜனங்களுக்கு ஒரு நல்ல ஸஹாய ஜீவனமாகும் என்பதில் சந்தேகமேயில்லை. இதைப்பற்றி கோயம்புத்தூருக்குச் செல்வோர் அனைவரும் அந்தஸ்தாபனத்தைப் போய்ப்பார்ப்பார்களாகில் அவர்கள் கோழிவளர்ப்பு விஷயங்களை நன்றாய்த்தெறிந்து கொள்வார்கள்.

கோயம்புத்தூர் ஸ்தாபனத்தில் நமது ஊழியர் பார்த்து ஆச்சரியப்பட்டது தேன் தொழில். ஜாதிக்காய்ப் பலகையால் ஒரு வித பெட்டி செய்யப்பட்டிருக்கிறது. அதில் இரண்டு பாகங்களிருக்கின்றன. மேல் பாகமொன்று கீழ்பாகமொன்று. ஒவ்வொரு பாகத்திலும் வலிமேட் பலகைகளுக்குச் சட்டங்கள் போட்டமாதிரி மத்தியில் ஒன்றுமில்லாமல் நாலு சட்டங்கள் கோற்கப்பட்ட சதுரங்கள் அமைக்கப்பட்டிருக்கின்றன. தேன் ஈக்களை மரப்பொந்துகளிலிருந்து பிடித்துக்கொண்டு அவைகளில் விடுகிறார்கள். மரப்பெட்டியினடியில் ஈக்கள் செல்வதற்கு சந்துவிடப்பட்டிருக்கிறது. பெட்டிகள் தோட்டத்தில் பல ஸ்தலங்களில் வைக்கப்பட்டிருக்கின்றன. ஈக்கள் பெட்டியை அடைந்தவுடன் மரச்சட்ட சதுரங்களின் ஓரங்களில் கூடுகளைக்கட்ட ஆரம்பிக்கின்றன. பெட்டியின் ஒருபாகத்தில் குஞ்சுகளிருக்கின்றன. மற்றொருபாகத்தில் தேன் சேர்க்கப்படுகிறது. அவைகள் மரப்பெட்டியின் சௌகரியத்தை நன்றாய் அறிகின்றன. தினந்தோறும் 2 மையில்கள் தூரம் சென்று தேனைக்கொண்டுவந்துக் கூடுகளில் சேர்க்கின்றன. மழை பெய்யும் காலத்தில் பூக்களில் தேன் அதிகமாக நிற்கிறதில்லையாம் அப்பொழுது தேன் குறைவாகத்தான் அகப்படுமாம். மற்ற காலங்களில் தேன் ஒரு பெட்டிக்கு வருஷத்துக்கு 10 ரூபாய்த் தேன் விகிதம் அகப்படுமாம். சுமார் 20 பெட்டிகள் கோயம்புத்தூர் ஸ்தாபனத்தில் வைக்கப்பட்டிருக்கின்றன.

ஈக்களுக்கு ஒவ்வொரு தடவையும் புதிதாகக் கூடுகட்டும்படியாயில்லாமலிருக்கும்படியாக கோயம்புத்தூர் ஸ்தாபனத்தில் தேனைக் கூண்டுகளிலிருந்து எடுக்க ஒரு மத்துப்போன்ற மேனாட்டுக்கருவி இருக்கிறது. அது ராட்டிணம்போல் சுத்துகிறது. தேன் கூடுகளை காயப்படுத்தாமலே அதில் வைத்துத் தேனை எடுத்துக்கொள்ளலாம் கூடுகள் கெடாமலிருக்கும், திரும்பியும் அவைகளைப்பெட்டிகளில் வைத்தால் ஈக்கள் அவைகளை உபயோகித்து அவைகளில் தேனைக் கொண்டுவந்து சேர்க்கும்.

இந்த ஸ்தாபனத்தில் பட்டுப்பூச்சிகளை வளர்த்து பட்டை உண்டாக்குவதற்காகவும் மல்பெரிச் செடிகள் வளர்க்கப்படுகின்றன.

வஸ்திரங்களுக்கு சாயம்போடுகிற வழிகளும் கற்பிக்கப்படுகின்றன.



வயது வந்தவர்களுக்குக் கல்விபோதனையும் நாடகமாடுகிறது. பஜனைகள் இவைகளின் மூலமாக நடத்தப்படுகிறது.

முக்கியமாக, கோழிவளர்ப்புத் தொழிலையும் தேன் தொழிலையும் பற்றி வற்புறுத்துவோம். அவை இரண்டும் நல்லவரும்படிகளைக் கொடுக்கக்கூடிய தொழில்கள். கிராம ஜனங்கள் இவைகளை கஷ்டமில்லாமல் நடத்தக்கூடும். பாரெஸ்டுப்பஞ்சாயத்தார்கள் இவைகளைக் கைப்பற்றினால் அவர்கள் நல்லலாபங்களை அடையக்கூடும்.

நம்முடைய மாஹணத்திலேயே கிராமச் சீரமைப்பு ஸஹாயத் தொழில் ஆராய்ச்சி, கூட்டுறவு விஷயங்கள் இவைகளைப்பற்றி அநேகர் வெறும் பேச்சுகளைப்பேசி வீண்காலம் கழிக்கிறார்கள்.

யுவ கிருஸ்தவ சங்கத்தார் செய்யப்பட்ட ஊழியம் புகழத்தக்கது. இவர்களைப்போல் சிரத்தையுடன் நம்முடைய தேசத்தின் க்ஷேமத்திற்கு உழைப்பவர்கள் வேறொருவருமில்லையென்பது மேல் சொல்லிய விவரங்களின்படி நன்கு விளங்கும்.

யுவ கிருஸ்தவ ஸங்கத்தார் இன்னும் பலவிடங்களில் இம்மாதிரியான வேலைகளைச் செய்கிறார்கள்.

## எக்காலக் கண்ணிகள்.

வற்றா சமுத்திரம் போல்
வந்து பணம் சேர்ந்தாலும்
பற்றாதென றேங்கியின்னம்
பணம் சேர்ப்பதெக்காலம்?
    வட்டி வரவால் மகிழ்ந்து
    வயிற்றைப் பாராட்டாமல்
    பட்டினி யுற்றாலும்
    பணம் சேர்ப்பதெக்காலம்?
வைக்க விடமற்று வந்து
வாய்ப் பேய்ச்சால் தந்தவரை
பக்குவமாய் எத்திப்
பணஞ் சேர்ப்பதெக்காலம்?
    இக்கட்டு வந்தாலும்
    இல்லை இல்லையென்று சொல்லி
    பைக்குள்கை வைக்காமல்
    பணஞ் சேர்ப்பதெக்காலம்?

எங்கும் லேவாதேவிச்
ய்ந்து கூடப்பிறந்தப்
பங்காளி தன்னை எத்திப்
பணஞ் சேர்ப்பதெக்காலம்?
மாங்கனி காய் நெய்யரிசி
வல்லிரகு வாங்காமல்
பாங்குடனே கூழ் குடித்துப்
பணஞ் சேர்ப்பதெக்காலம்.

(அமிர்த குணபோதினி)

# செடிவர்க்கங்களின் விஷயங்கள்

(ம-ா-ா-ஸ்ரீ. தி. வி. சுவாமிநாத அய்யர் எழுதியது)

## அத்தியாயம் VI செடிகளின் வம்சவிருத்தி முயற்சிகள்.

செடிகளின் புஷ்பங்கள்தான் ஆண் பெண் அங்கங்களை வஹிக்கின்றன. சில செடிகளில் ஆண் அங்கத்தையே வஹிக்கிற ஆண் புஷ்பமென்பதும் பெண் அங்கத்தையே வஹிக்கிற பெண் புஷ்பமென்பதும் தனித்தனியாக இருக்கின்றன. அநேகச்செடிகளில் அவ்விரண்டு அங்கங்களும் ஒரே புஷ்பத்திலேயேயிருக்கின்றன. செடிகளுள் வெகு தாழ்ந்தவகுப்பில் புஷ்பங்களேகிடையாது. இவ்வகுப்பில் ஆண் பெண் அம்சங்களே இல்லை. இச்செடிகளுக்குத்தாய்மாத்திரம் தான் உண்டே ஒழிய தகப்பனே கிடையாது. இவ்வகுப்பிற்கு அடுத்த மேல் வகுப்பு குட்டைகளின் ஓரங்களின் பாசியோடு கிடக்கும், ஒட்டடையைப்போலிருக்கும் பூண்டு. இவ்வகைப்பூண்டு அநேகஸெல்களை சரம்போல் ஒட்டிவைத்துக்கொண்டு வளருகிறது. ஸெல்களில்பச்சை கிளாரபில் இருக்கிறது. இவ்வகைச்செடிகள் இரட்டையாகமுளைத்துவருகின்றன. சூக்ஷ்மவஸ்து திருஷ்டிக்கண்ணாடியில் ஒரு இரட்டையைப் பார்த்தால் அடுத்தாப்போலிருக்கிற இரண்டு ஸரங்களின ஸெல்கள் ஒன்றோடொன்று சேர்ந்து புணர்வதை நாம்பார்க்கக்கூடும். புணர்ச்சிருசியும், வழியும் இவ்விதமாக ஆதியில் வாய்ந்திருக்கிறது.

புணர்ச்சி ஏன் அநுஷ்டிக்கப்படுகிறது? புரோடோபிளாஸமானது எப்போதைக்கும் இளசாகவும் பிசுக்கொடுக்கும் வழவழுப்பாகவும் இருக்க வேண்டியதற்காகவும் இஷ்டம்போல் அசைகிற சக்



தியையும் வஹித்துக்கொண்டிருக்கவேண்டியதற்காகவும் புணர்ச்சி அநுஷ்டிக்கப் படுகிறது. அது இந்த குணங்களை இழக்குமாகில் அது கிழத்தனத்தையடைந்துச் செத்துப்போகும். அதுகாரணம்பற்றியே செடிகளும், பிராணிகளும் அநேக உபாயங்களை உடைத்தாயிருக்கின்றன. இரண்டு ஸெல்கள் புணர்ந்தால் உண்டாகும் ஸெல் ஒரே ஸெல் பல ஸெல்களாக பிறிவதினால் உண்டாகும் ஸெல்களைக்காட்டிலும் அதிக வலிவாகவும் அதிக சக்தியையுள்ளதாகவும் வாய்கிறது. ஒவ்வொரு செடியும் பிராணியும் வயது வந்த உடனே தங்களுடைய ஜாதியைச்சேர்ந்த இன்னொரு செடி அல்லது பிராணியோடு புணர்ந்து பல முள்ள குழந்தைகளை அடைகிறது. முன்னே கூறப்பட்ட ஒட்டடைபோன்ற பூண்டுகளின் ஸெல்களில் ஆண் என்றும் பெண் என்றும் வகைகளில்லை. அவைபருமனிலும், உருவத்திலும், சக்தியிலும் ஒன்றைப்போலவே எல்லாமிருக்கின்றன. உயிர்தர வகைச்செடிகளில் ஆண் என்றும் பெண் என்றும் இருவகை ஸெல்களை நாம் காண்கிறோம். ஆண் ஸெல்லாகிய போலன் சிறியதாகவும் முயற்சியுடனும் அதிக சக்திவாய்ந்ததாகமிருக்கிறது, பெரியதாகிய ஓவியூலென்கிற பெண்ஸெல் முயற்சியில்லாமலிருக்கிறது. ஓவியூலானது போலனால் புணரப்பட்டாலொழிய விரையாக வளராது. உயர்தரச் செடிகள் போலனை வஹிப்பதற்குத் தனி அங்கமொன்றையும், ஓவியூலைவஹிப்பதற்குத்தனி அங்கமொன்றையும் வஹிக்கின்றன. ஆண் அங்கத்தின் பெயர் ஸ்டேமன், பெண் அங்கத்தின் பெயர் பிஸ்டில்.

ஒவ்வொரு செடியும் அநேக தனி நபர்களையுடைய பொது கூட்டுவாஸ ஸ்தலமாக விருக்கிறதே ஒழியே அதுவே ஒரு தனி நபராக இருக்கவில்லை. செடியை தேன் ஈக்களின் கூட்டிற்கு ஒப்பிடக்கூடும். தேன் கூட்டில் வேலை செய்யப்பட்ட ஈக்கள் ஆண்களுமல்ல பெண்களுமல்ல. கூட்டிலுள்ள ஈக்களுக்கெல்லாம் வேண்டிய உணவைத் தேடிச் சம்பாதிக்க வேண்டியது அவைகளின் ஊழியமாகவிருக்கிறது. கூட்டில் இராணி ஈ ஒன்று இருக்கிறது. அது அநேக முட்டைகளையிட்டுக் குஞ்சுகளை உற்பத்தி செய்கிறது. கூட்டில் அநேக ஆண் பூச்சிகள் இருக்கின்றன. அவைகள் இராணிப்பூச்சியோடு புணர்ந்து மேற்சொல்லிய குஞ்சுகளை உற்பத்தி செய்கின்றன. அதுபோல, விருக்ஷத்தில் இலைகள்தான் ஊழியர்கள், அவைகள் ஆண்களுமல்ல பெண்களுமல்ல. அவைகள்

உணவுகளைக் கிரஹித்துச்சேர்த்து வைக்கின்றன. அவைகள் புதிய இலைகளை உற்பத்தி செய்கின்றன. ஆண் பெண் அங்கமில்லாமலே அவைகள் இவ்வித உற்பத்தி முயர்ச்சிகளைச் செய்கின்றன. செடிகளின் புஷ்பங்களை இலைக்கொத்துகள் என்றே சொல்லவேண்டும். அவைகளில் ஸ்டேமன்கள் என்பவை ஆண்கள். இவை தேன் கூட்டிலுள்ள ஆண் ஈக்களைப்போல் வேலை செய்கின்றன பிஸ்டில் என்பது பெண் அங்கம். அது தேன் கூட்டிலுள்ள இராணி ஈயைப்போல் குஞ்சுகளை உற்பத்தி செய்கிறது.

சில செடிகளின் இலைகளை அவைகளிலின்று தனிப்படுத்தி வேறு ஸ்தலங்களில் நட்டோமானால் அவைகள் முளைத்துச்செடிகளாக வளர்வதும் உண்டு. சில விருக்ஷங்களின் இலைகள் உதிர்ந்து தரையில் விழுந்தபின் முளைத்து வளர்வதுமுண்டு.

புஷ்பங்கள் ஒரு பிஸ்டில்லோடும் அநேக ஸ்டேமன்களோடுமிருக்கின்றன. ஆனால் அநேகவகைப் புஷ்பங்கள் பல பிஸ்டில்களோடும் அவை யொவ்வொன்றையும் சேர்ந்த அனேக ஸ்டேமன்களோடுமிருக்கின்றன. பின் சொல்லிய புஷ்ப்பங்கள் அநேக மலர்கள் சேர்ந்த கொத்துகளே ஒழிய தனித்தனிப் புஷ்ப்பங்களல்ல. ஸ்டேமன்களிலுள்ள போலன் என்னும் தூள் கர்ப்பப்பையை மூடிக்கொண்டிருக்கும். பிஸ்டிலின் மேல் பாகத்தில் விழுகிறது. அது விழுந்த உடனே அங்கேயுள்ள பிசின் உள்ள வஸ்து அதைப் பிடித்துக்கொண்டு ஒரு குழலை உண்டாக்கி அதை கர்ப்பப்பையோடு தொடுத்துபோலனை அதற்குச் செலுத்துகிறது. இவ்வித பாகப்போலன்கள் கர்ப்பப்பையிலுள்ள ஓவில்களோடு ஸம்பந்தித்து ஓவியூல்களை முட்டைகளாக வளரச்செய்கின்றன. போலன்கள் ஓவியூல்களோடு ஸம்பந்தப்படாமற் போனால்அவைகள் முட்டைகளாக மாறமாட்டா? அவைகள் உதிர்ந்து அழிந்துபோய்விடும். புஷ்பங்களில் இதழ்களிருப்பது பூச்சிகளை மோஹித்து வரவழைக்கிறதற்காகத்தான். அவைகள் அடியில் கேலிக்ஸென்ற பாவாடைகளை உடைத்தாயிருப்பது புஷ்பங்கள் மொட்டுகளாயிருக்கும்பொழுது கர்ப்பப்பையிலுள்ள ஓவியூல்களையும் ஸ்டேமன்களிலுள்ள போலன் தூள்களையும் ரக்ஷிப்பதற்காகத்தான். உயர்தரச்செடிகளில் புஷ்பங்களின் ஸ்டேமன்கள் அவைகளின் போலன்களை அவைகளைச் சேர்ந்த பிஸ்டில்களிலுள்ள ஓவியூல்களோடு சம்பந்தப்படுத்துகிறதில்லை. கீழ்த்தரச்



செடிகளில் அவ்வப்பியாஸம் இருக்கக்கூடும் ஒரு செடியின் புஷ்பத்தின் ஸ்டேமன்களின் போலன்கள் அதேவகையிலுள்ள மற்றொரு செடியின் புஷ்பத்தின் பிஸ்டிலிலுள்ள ஓவியூல்களோடு ஸம்பந்தப்படுவதுதான் சாதாரணமாகவிருக்கிறது. இவ்விதமான புணர்ச்சியால்தான் வலிவையுள்ள செடிகள் ஜனிக்கக்கூடும். உலகத்தில் ஓங்கி வளர்ந்து வருகிற செடிகளும் விருக்ஷங்களும் இவ்வகைப்புணர்ச்சியால் ஏற்பட்டவைகளே. ஒரே செடியிலேயே ஆண் பெண் புணர்ச்சி ஏற்பட்டால்அப்புணர்ச்சயால் உண்டாகும் செடிகள் அல்பபலத்தைத்தான் வஹிக்கக்கூடும். அவைகளின் வம்சாபிவிருத்தி க்ஷீணித்துவிடும்.

ஆதியிலிருந்த செடிகள் இலைகள், ஸ்டேமன்கள், பிஸ்டில் ஆகிய மூன்று உறுப்புகளைத்தான் வஹித்திருந்திருக்கக்கூடும். அவைகளின் புஷ்பங்கள் ஸ்டேமன்களையும் பிஸ்டிலையும் மாத்திரம் வஹித்துக்கொண்டும் அடியில் சிறிய இலைகளால் பந்தனப்பட்டுமிருந்திருக்க வேண்டும். அப்படியிருந்திருக்கும்பக்ஷத்தில் புஷ்பங்களுக்கு வர்ணமுள்ள இதழ்கள் எப்படி ஏற்பட்டன? செடிகளில் ஆண் பெண் புணர்ச்சியைச்செய்து வைப்பதற்கே பறக்கும் பூச்சிகள் அவைகளில் பிரவேசிக்கின்றனவாதலால் அப்பூச்சிகள் உலகத்தில் உண்டாவதற்கு முன்பு நிறமுள்ள இதழ்களை வஹித்த புஷ்பங்கள் உண்டாயிருக்கக் கூடியதல்ல. ஆனால் எறும்பு முதலிய சாதாரணப்பூச்சிகள் ஸ்டேமன்களிலுள்ள போலனைத்தின்றுவிடுவது தற்காலத்தில் போலவே அக்காலங்களிலும் சாதாரணமாகவிருந்திருக்கக்கூடுமாகையால் இப்படி அவைகள் செய்யாமலிருப்பதற்காகவும் தங்களுக்கு புணர்ச்சி வழியில் பிரயாஸப்படுகிற பூச்சிகளுக்கு உதவி செய்வதற்காகவும் செடிகள் புஷ்பங்களின் அடிபாகங்களில் தேனை வஹித்து அப்பூச்சிகளுக்குக்கொடுக்க ஆரம்பித்தன. அவைகளுக்குத் தேனிருப்பதைத் தெறிவிக்கிறதற்காகவும் அவைகளை மோஹித்து வரவழைப்பதற்காகவும் அவைகள் பிரகாசமான இதழ்களை உண்டாக்கிக்கொண்டன. ஆதிகாலத்துப் புஷ்பங்களில் அநேக ஸ்டேமன்கள் இருந்திருக்கக் கூடும். அத்தனை ஸ்டேமன்களில் இரண்டொன்று இலைகளைப்போல் அகண்டு தட்டையாகி, ஆனால் அவைகளைப்போல் நரம்புகளை வஹிக்காதபடி, மாறுபாட்டை காலக்கிரமத்தில் அடைந்திருக்கக்கூடும். அவைகள் நல்ல நிறங்களையும் அடைந்திருக்கக்கூடும். அவைகளில் போலன்கள் இருந்திருது. அவைகள்தான் இதழ்களாக அமைந்திருக்

கின்றனவென்று தெரியவருகிறது. வெண்மையான நீர் லிலியைப் பார்த்தால் அதில் நடுவில் நீண்ட பிஸ்டிலிருக்கிறது. அதோடுகூட போலன்பைகளை தொங்கவிட்டுக்கொண்டிருக்கிற சாதாரண ஸ்டேமன்களுமிருக்கின்றன. இதழ்களையொட்டி நிற்கிற ஸ்டேமன்களின் தாள்கள் அகண்டுகொண்டும் சரியானபடி அமையாத போலன் பைகளோடுமிருப்பதை நாம் காண்கிறோம். இவ்வரிசைக்குப்பின் வரிசையாகிய கடைசிவரிசை தான் சரியான இதழ் வரிசையாகவிருக்கிறது. வாடர்லிலியின் அமைப்பு புஷ்பங்களின் இதழ்கள் உண்டான வழியை நிரூபிக்கிறது. இன்னொருவிதமாக இதழ்களுண்டான வழியை நிரூபிக்கக்கூடும். படர்கப் என்கிற செடியின் புஷ்பம் மஞ்சள் நிறமாகவிருக்கிறது. அது போலவே அநேக செடிகளின் புஷ்பங்கள் மஞ்சள் நிறமாகவேயிருக்கின்றன வென்பதை நாம் கவனிக்கிறோம். எல்லாப் புஷ்பங்களிலும் போலன்கள் அந்நிறமாகத்தானிருக்கவேண்டும். புஷ்பங்களின் இதழ்கள் வரவர அநேகவர்ணங்களை அடைய ஆரம்பித்தன. மஞ்சளிலிருந்து அடுத்தபடியாக வெண்மையும், அதற்கு அடுத்தபடியாக ஊதா நிறத்தையும் அதற்கும் அடுத்தப்படியாகசிகப்பு நிறத்தையும், அதற்கும் அடுத்தபடியாக நீலவர்ணத்தையும் அவைகள் அடைந்தனவென்று அறியப்படுகிறது.

அநேகமான செடிகளில் புஷ்பங்கள் ஐந்து இதழ்களையும் ஐந்து ஸ்டேமன்களையும் ஐந்து ஓவியூல்களையும், காம்பினிடத்தில் ஐந்து சிறிய இலை போன்ற இதழ்களையும் வஹித்துக்கொண்டிருக்கின்றன. சில செடிகளில் இதழ்கள் ஐந்து ஐந்து கொண்ட வரிசைகளாக பல வரிசைகளாய் அமைந்திருப்பதுமுண்டு. இதழ்கள் ஐந்தாகவிருந்தால் ஐந்து ஓவியூல்கள் தானிருக்கும். அவைகள் வரிசைக்கு ஐந்தாக இரண்டு வரிசைகளாக அமைந்திருந்தால் பத்து ஓவியூல்களிருக்கும், ஆனால் காம்பினிடத்திலுள்ள சில இலைபோன்ற வரிசையில் ஐந்து இதழ்கள் தானிருக்கும். கடைசியாகச்சொல்லப்பட்ட காம்பினிடத்திலுள்ள இலை போன்ற இதழ் வரிசையின் அமைப்பு மலர்களின் தேன் பாகத்தை எறும்புகள் அடையாதபடி ரக்ஷிக்கிறது.

பட்டர் கப்புச்செடிகளில் ஸ்டேமன்களும், ஓவியூல்களும் ஏக காலத்தில் பக்குவமாகி வருகிறதில்லை. ஸ்டேமன்கள்தான் முதலில் முதிர்ந்துவருகின்றன, ஓவியூல்கள் பின்பு முதிர்கின்றன. புஷ்பங்களின் ஸ்டேமன்கள் முதிர்கிறபொழுது தேனிற்காக அவைகளைப் 



பூச்சிகள் அடையுமளவில் போலன்கள் அவைகளின் ஸ்டிக்மா என்கிற பாகத்தில் விழுந்தால் கர்பப்பையில் சரியானபடி ஏற்பட்டிராத ஓவியூல்களுக்கு அவை உபயோகப்படாது. ஆகையால் ஒரே புஷ்பத்திலேயே ஆண் பெண் புணர்ச்சி ஏற்படுவது தடுக்கப்படுகிறது. ஆகவே, பூச்சிகள் ஸ்டேமன்கள் முதிர்ந்த புஷ்பங்களில் நுழைந்து போலனைமேலே பூசிக்கொண்டு வெளிக்கிளம்பினபிறகு கர்ப்பப்பை முதிர்ந்த புஷ்பங்களில் நுழைந்து போலனை அவைகளின் கர்ப்பப்பைகளில் சேர்க்கின்றன.

கோர்வலீ என்று ஒரு வகைச்செடி இங்கிலாந்திலிருக்கிறது. அதன் புஷ்பத்தில் இருபக்கங்களிலும் சிறிய மூண்டுகளிருக்கின்றன. ஈ வந்து முண்டுகளின்மேல் உட்காருகையில் புஷ்பம் விரிந்து கொண்டு போலனை அதன் மேல்த் தடவுகிறது. புஷ்ப்பம் ஒரு தடவை விரிந்தபின் மறுபடியும் மூடிக்கொள்ளுகிறதில்லை. ஆகையால் ஈக்கள் திறந்த கோர்வலி புஷ்பங்களை அடைகிறதில்லை. இன்னொருவகைச் செடிகளில் புஷ்பங்கள் திறந்துகொள்வதற்கு முன்னமே போலன்கள் அவைகளின் அடிபாகத்தையடைந்து விடுகின்றன. ஈக்கள் முட்டுகளில் உட்கார்ந்தவுடனே புஷ்பங்கள் போலன்களை அவைகளின் மேல் பீச்சிவிடுகின்றன.

அநேக செடிகளில் மலர்கள் குழல்களைப்போல் அமைந்திருக்கின்றன. ஆதியில் தனியாக இருந்த இதழ்கள் ஒட்டி குழலமைப்பை அடைந்திருக்கின்றனவென்பது புலப்படும். அநேக வகைச்செடிகளில் புஷ்பங்களின் இதழ்கள் ஒட்டிக்கொண்டிருப்பதையும், அவைகள் மேல்பக்கங்களில் மாத்திரம் திறந்து தனித்தனியாக இருந்துகொண்டும் கீழ் பாகத்தில் ஒட்டிக்கொண்டுமிருப்பதையும் நாம் காண்கிறோம். இவ்வித ஏற்பாடுகளை அவைகள் ஈக்கள் அவைகளுள் நன்றாய்ச் செல்லவேண்டிய நிமித்தம் ஏற்படுத்திக்கொண்டிருக்கின்றன. இவைகளுள் புகும் ஈக்கள் பெரிதானவைகளாவேயிருக்கின்றன மேலும் மலர்கள் குழாய்போன்ற சரீரங்களை வஹிப்பதால் அவை அதிகத்தேனையும் வஹிக்கின்றன.

பிரிம் ரோஸ் என்று ஒரு வகைச்செடி மேநாட்டில் இருக்கிறது அது இருவகை மலர்களை உண்டாக்குகிறது. மலர்கள் குழல் போன்ற உடல்களை உடைத்தாயிருக்கின்றன. ஆனால் அவைகள் இரண்டு உருவங்களை உடைத்தாயிருக்கின்றன. ஒருவிதப் புஷ்ப்பம் குட்டையான

உடலோடும் நீண்டு வெளி வந்த ஸ்டேமன்களோடு மிருக்கிறது, மற்றொன்று நீண்ட உடலோடும் உடலின் கழுத்து பாகத்தில் ஒட்டிக் கொண்டு நிற்கிற குட்டையான ஸ்டேமன்களோடு மிருக்கிறது. ஈக்கள் குட்டையான உடலுள்ள மலர்களின் நீண்ட ஸ்டேமன்களிலுள்ள போலனைத் தங்களின் நீண்ட தும்பிக்கையால் கிரஹித்து விட்டு வெளிக்கிளம்பி நீண்ட உடலுள்ள புஷ்பங்களின் ஸ்டேமன்களிலுள்ள போலன்களை கிரஹிக்கப் போகையில் இரண்டாவது மலரின் பிஸ்டில் பக்கத்தில் தும்பிக்கை பட்டுமுதல் மலரின் போலன் அதில் சம்பந்தப்படும். அவ்விதமாகவும் புணர்ச்சி ஏற்படுகிறது.

சில செடிகளில் ஈக்கள் பூக்களின் உள்ளே பிரவேசித்த உடனே ஸ்டேமன்கள் அவைகளைக் கட்டிக் கொள்கின்றன அப்பூக்களில் ஸ்டேமன்கள் மாத்திரம் முதிர்ந்திருக்கும். பூச்சிகள் வெளியே வந்து ஒவியூல்கள் முதிர்ந்த பூக்களில் நுழைந்து அவைகளில் முன்னே அவைகளடைந்த போலன்களைச் சேர்க்கின்றன. பூச்சிகள் முதல் வகைப் பூக்களில் நுழையும் பொழுது ஸ்டேமன்கள் அவைகளைக்கட்டி அணைக்கின்றன. அவைகள் அப்புஷ்பங்களின் போலன்களை இரண்டாவது வகைப்புஷ்பங்களின் பிஸ்டிலின் அடிபாகத்தில் கொண்டுபோகும் பொழுது இரண்டாவது புஷ்பத்தின் பிஸ்டிலின் அடிபாகம் போலனை கிரஹிப்பதற்கு வணங்கிவருகிறது.

செடிகளின் ஆண் பெண் புணர்ச்சிகள் ஈக்களாலும் பூச்சிகளாலுமே செய்யப்படுகின்றன வென்பதில்லை. அநேகச் செடிகளின் பழங்களும் மலர்களும் அழுகின மாம்ஸம்போல் நாறுகின்றன. அவைகளில் வண்டுகள் செல்கின்றன. அநேக போலன்போன்ற உருவத்தையுடைய உஷ்ணதேச மலர்களில் பரவைகள் சென்று தேனைக் குடித்து புணர்ச்சியைச் சாதகப்படுத்துகின்றன.

அநேக புஷ்பங்களில் வரிகளும் கோடுகளுமிருந்து தேன் இருக்கப்பட்ட இடத்தைப் பூச்சிகளுக்கு வழிகாட்டுகின்றன.

(VI-வது அத்தியாயம் முடியவில்லை. அடுத்த சஞ்சிகையில் தொடரப்படும்.)



# நில அடமான பாங்கிகள்

[கனம். ராம்தாஸ் பந்துலு அவர்கள் எழுதியது.]

இந்தியாவில் ஏற்படவேண்டிய நில அடமான பாங்கிகள் சிறிய வியவஸாயிகளுக்கு நீண்டகால கெடுக்களில் கடன்களைக் கொடுக்கக் கூடியவைகளாக விருக்கவேண்டும். அவைகள் உத்திரவாதம் நிர்ணயிக்கப்பட்ட சங்கங்களாக விருக்கவேண்டும். பங்குக்காரர்கள் பெரும் பாலும் கடன் வாங்குவோர்களாக விருக்கவேண்டியதுடன் கடன் வாங்காத சில தனிகர்களும் நிர்வாஹத்திறமையுள்ளவர்களும் பங்குக்காரர்களாக விருக்கவேண்டும். கடன்கள் பொறுப்புக்களின் பேரில்தான் கொடுக்கப்பட வேண்டுமே யொழிய நபர்களின் யோக்கியதையின் பேரில் கொடுக்கப்படக்கூடாது. பங்குக்காரர்கள் அதிக லாப உத்தேசத்தை வஹிக்கக்கூடாது. அத்தியக்ஷகர்கள் நிர்வாஹத் திறமை வாய்ந்தவர்களாகவும் பொறுப்பு நிலங்களை ஸரிவர மதிப்பு செய்யக்கூடியவர்களாகவு மிருக்கவேண்டும்.

நம்முடையதேசத்தில் எல்லா மாஹாணங்களிலும் வியஸாயிகளின் செல்வநிலை ஒரேவிதமாக அமைந்திருக்கிறபடியால் ஒரே விதமான நில அடமான பாங்கிகள் எல்லாமாஹாணங்களிலும் ஏர்ப்பட்டால் போதும். பாங்கிகள் தங்களுக்கு வேண்டிய பணத்தை தங்களுடைய வசத்தில் வைக்கப்பட்டபொறுப்பு ஸொத்துக்களின் பேரில் கடன் வாங்கிக்கொள்ளவேண்டும். வியவஸாயிகள் வியவஸாய முயர்ச்சிகளைக் கூட்டுறவு வழிகளில்ச்செய்தால் அவர்கள் நல்ல லாபத்தையடையக்கூடும்.

கிராம நில அடமான பாங்கிகள் முயற்சிசெய்வதில் சில கஷ்டங்களிருக்கின்றன. அவைகள டிபெனச்சர்களை விற்று பணத்தை உண்டுபண்ணமுடியாது மேலும், டிபாஸிட்டர்களும் பங்குக்காரர்களும் பாங்கிகள் ஸரிவர நடக்கு வட்டி வகையராக்களைத் தாமதமில்லாமல் கெடுத்தேதிகளில் கொடுக்கவேண்டியதைக் கோருகிறார்கள். கூட்டுறவு மாஹாணபாங்கி ஒன்று உண்டாய் கிராமபாங்கிகளுக்குப் பணஉதவி செய்வது போல மாஹாணநில அடமான பாங்கி ஒன்று உண்டாய் கிராமநில அடமான பாங்குகளுக்குப்பணஉதவி செய்ய வேண்டும். காலக்கிரமத்தில் பல ஜில்லாக்களில் பெரிய பாங்கிகள் ஏற்படக்கூடும். மேற்கூறிய யோசனை 1926ல் வருஷத்திய மாஹாணக்

கூட்டுறவுச்சங்க ரிஜிஸ்டிரார்களின் வருஷாந்திரஸபையில் அங்கீகரிக்கப்பட்டது.

மாஹாணநில அடமான பாங்கிற்கு மாஹாணககூட்டுறவு பாங்கி ஏஜண்டாகவாய்ந்து அதன் முயர்ச்சிகளைச்செய்யலாம். நில அடமான பாங்கிகள் எல்லாமாஹாணங்களிலும் கூட்டுறவு வழியிலேயே ஏற்படுத்தப்படவேண்டும். ஒரேதினுசான நில அடமான பாங்கிகள் எல்லாமாஹாணங்களிலும் உண்டாக்கப்படவேண்டும். கிராமக்கூட்டுறவு சங்கங்கள் நெடுநாள் கெடுக்களையுடைய நிலஅடமானக்கடன்களைக்கொடுக்கக்கூடாது. நிலஅடமான பாங்கிகளும் கிராமக்கூட்டுறவு சங்கங்களின் அங்கதினர்களுக்கு மாத்திரமே கடன்களைக்கொடுக்க வேண்டுமென்பது மில்லை. அவைகள் இதார்களுக்கும் கடன்களைக் கொடுக்கவேண்டும். கிராம நிலஅடமான பாங்கிகளுக்குப்பணஉதவி செய்வதற்காகவும், டெபென்ச்சர்களின் மூலமாகப் பணத்தைச் சேகரிப்பதற்காகவும் மாஹாண நிலஅடமான பாங்கிகள் ஸ்தாபிக்கப்படவேண்டும். கிராம நிலஅடமான பாங்கிகள் அவைகளின் அங்கத்தினர்கள் வாங்கக்கூடியகடன் தொகைகளின் மொத்தத்திற்கு ஏற்றபடி மூலதனப்பங்குகளை வஹிக்கவேண்டும். கடன்கள் பொறுப்பு நிலங்களின் மதிப்பில் பாதி தொகைகளுக்கு வட்டி 100க்கு வருஷம் ஒன்றுக்கு எட்டுக்கு மேல்படாமலிருக்கவேண்டும். நிலஅடமான பாங்குகளின் நிர்வாஹச்சிலவு வெகு குறைவாக விருக்கவேண்டும். கடன்களின் கெடுக்கள் 20 இலிருந்து 30 வருஷங்கள் வரையில் இருக்கவேண்டும்.

கவர்மெண்டாரும் டெபென்ச்சர்களின் நிமித்தம் பணஉதவி செய்து இன்கம்டாக்ஸ், ஸ்டாம்பு, ரிஜிஸ்டிரேஷன் கட்டணம் இவ்வகைகளில் நில அடமான பாங்கிகளுக்குச் சிலவு இல்லாதபடிச் சௌகரியப்படுத்த வேண்டும்.

நில அடமான பாங்கிகளை உண்டாக்க வேண்டிய வழியில் கவர்மெண்டார் கொஞ்சமேனும் சிரத்தையை வஹிக்க ஆரம்பிக்கவில்லை. கூட்டுறவினர்களும் ஒவ்வொரு மாஹாணத்திலும் உற்சாகம் கொண்டவர்களாக விருக்கவில்லை. நம்முடைய தேசத்தில் நிலவரியின் மூலமாகத்தான் கவர்மெண்டுக்கு அதிக வரும்படி ஏற்படுகிறது. வியவசாயிகள் வரவர க்ஷீணமடைந்தால் கவர்மெண்டாரின் வரும்படி குறைவுப் படப்போகும். கிராமங்களிலுள்ள வியவசாயிகளுக்கு



நீண்டகாலக்கடன்கள் குறைந்த வட்டியில் கொடுக்கப்படும்படியான ஏற்பாடு உண்டாக்கப்படாவிட்டால் வியவஸாயிகளிற் பெரும்பாலர்கள் வியவஸாயத்தொழிலையே விட்டுவிடுவார்கள் என்பதில் சந்தேகமில்லை. வியவஸாயத்தை வரவர வியவஸாயிகள் விட்டுவிடுவார்களானால் தேசக்ஷேமம் குறைந்து போய்விடும். ஆகையால் நில அடமான பாங்கிகள் உடனே ஏற்படுத்தப்படவேண்டும்.

மேலும் வியவஸாயிகள் அதிகக்கடன்களைச் சுமந்து வந்தால் 1855இல் ஏற்பட்டஸந்தோல் கலகத்தைப்போன்றதும், ஐக்கிய மாஹாணங்களில் 1857-ம் வருஷத்தில் மியூடினியிக்கும் பின்பு நடந்த கலகத்தைப்போன்றதும், 1875இல் தக்ஷிணத்தில் நடந்த கலகத்தைப் போன்றதும், 1891இல் ஆஜ்மீரில் நடந்த கலகத்தைப்போன்றதுமான கலகங்கள் அதிகமாக ஸம்பவிக்கக்கூடும். மேனாட்டு தேசங்களில் நிலஅடமானக்கடன் சௌகரியங்களினால் வியவஸாயிகள் க்ஷேமத்தையடைந்து செல்வநிலையில் இருக்கிறார்கள். ஆகையால், நம்முடைய தேசத்திய வியவஸாயிகள் இவ்விதச் சௌகரியங்களையடைந்தால் தான் நம்முடைய தேசத்தின் க்ஷேமமும், செல்வமும் உயரும்.

## வியவஸாயவழிகளில் ஆராயச்சி

சிறப்பு வாய்ந்த நமது இராஜப்பிரதிநிதியவர்கள் சென்ற ஜூன்மீ 21உயன்று ஸிம்லாவில் வியவஸாய விசாரணைசபையார் குறிப்பிட்டபடி வியவஸாய ஆராய்ச்சிசபை உண்டாக்கினர். அம்மஹோத்ஸவத்தில் மாஹாணங்களிலிருந்து அநேகபிரதிநிதிகள் வந்திருந்தார்கள். இராஜப்பிரதிநிதியவர்கள் பின்வருமாறு உபந்நியஸித்தார் :—

கனவான்களே. இந்தியா தேசமானது ஒரு பெரிய வியவஸாய தேசம். இப்படிப்பட்ட அகில இந்தியா ஆராய்ச்சிசபை உண்டாவதால் மாஹாணங்களின் வியவஸாய அபிவிருத்தி ஓங்கி வளரும். லின்லித்கோப்பிரபுவும் அவருடன் உழைத்த கனவான்களும் குறிப்பிட்ட வழியில் வியவஸாய மந்திரிகளின் முயர்ச்சிகளாலும், மாஹாணப்பிரதிநிதிகளின் முயர்ச்சிகளாலும், அஸ்ஸெம்பிளியின் கக்ஷித்தலைவர்களின் ஒத்தாசையாலும் இந்த வியவஸாய ஆராய்சிசபை உண்டாக்கப்பட்டது. சபையில் கவர்மெண்டாரின் சம்பந்தம் பணச்சிலவு விஷயத்தில் மாத்திரம் தான் வஹிக்கப்படுகிறது. பணத்தைக் கவர்மெண்

டார் கொடுக்கிறபடியால் அந்தப்பணம் தக்கபடி செலவாகிறதா வென்று பார்க்க வேண்டிய பாத்தியதை கவர்மெண்டாருக்கு இருக்கிறது. ஆகையால் தான் அச்சம்பந்தத்தை அவர்கள் வைத்துக்கொள்ள வேண்டியதாக விருக்கிறது. ஆராய்ச்சிசபையின் நிர்வாஹசபையில் வியவஸாய மந்திரிகள் அங்கத்தினர்களாக விருப்பது வியவஸாய ஆராய்ச்சிசபைக்கு மிகுந்த பலத்தைக்கொடுக்கிறது இவ்வாராய்ச்சி சபையானது மாஹாணங்களிலுள்ள வியவஸாய மாட்டுவைத்திய இலாகாக்களுக்கு வெகு திறமான ஆலோசனைகளைச் சொல்லப்போகின்றன. டிராப்டு மெமோராண்டாமானது ஸர் பிரடெரிக் நாய்ஸ் அவர்களால் பார்வையிடப்பட்டிருக்கிறது. அது உங்களுடைய அங்கீகாரத்திற்கு வைக்கப்பட்டிருக்கிறது. ஆராய்ச்சிஸபைக்குத் தலைவராக அநேக உத்யோகங்களில் கீர்த்தியைப்பெற்ற மிகுந்த அநுபவம் வாய்ந்த ஸர். டி. விஜயராகவாச்சாரியார் அவர்கள் நியமிக்கப்பட்டிருக்கிறாரென்பதைக்கேட்க நீங்கள் மிகுந்த சந்தோஷத்தை யடைவீர்கள். பீஹார் மாஹாணத்தின் வியவஸாய அத்தியக்ஷகரான மிஸ்டர் ஹார்ட்டு சபைக்கு வியவஸாய நிபுணராக நியமிக்கப்பட்டிருக்கிறார். மாட்டுவைத்திய நிபுணராக ஒரு சிறந்தவர் அந்நிய நாட்டிலிருந்து நியமிக்கப்படுவார். இச்சபையை உண்டாக்குவதற்கு ராயல்கமிஷனர்கள் யோசனைகளைக் குறிப்பிடுகையில் அவர்கள் அதை ஆஸ்டிரேலியாவில் ஏற்படுத்தப்பட்டிருக்கிற சாஸ்திர ஆராய்ச்சிஸபையைப்போல் ஏற்படுத்தவேண்டும் என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். பிரிடிஷ் இராஜ்ஜியம் முழுவதும் ஒவ்வொருவித முயர்ச்சிகளும் பலவிடங்களில் பலரால் நடத்தப்பட்டு ஒவ்வொருவரும் அவரவருடைய முயர்ச்சிகளின் வறலாற்றை மற்றவர்களுக்குத் தெறிவித்துக்கொள்ளுகிறார்கள். அது ஒரு நல்ல ஏற்பாடு. இந்தியாவும் இராஜ்ய ஆராய்ச்சிஸ்தாபனத்தில் சேரவேண்டும்.

மேன்மை தங்கிய நிஜாம் அவர்கள் ஆராய்ச்சிஸபைக்கு 2 லக்ஷ ரூபாய்களைக் கொடுத்திருக்கிறார் என்று உங்களுக்கு வெகு சந்தோஷத்துடன் சொல்லுகிறேன். அவருக்கு ஸபையார்த்தகுந்த வந்தனத்தைச் செலுத்துவார்கள். நிஜாம் அவர்களைப்போலவே இதர இராஜாக்களும் ஜமீந்தார்களும் சபைக்குப் பணஉதவி செய்வார்களென்று நம்புகிறேன்.



# இந்திய கிராமாந்தரங்களின் ரஸ்தா சௌகரியங்கள்.

## அகில இந்தியா ரஸ்தாங்கத்தார் 500 ரூபாய்ப்பரிசளித்த மிஸ்டர் கோலாகோ அவர்களின் வியாஸம்.

நம்முடைய தேசம் வெகு பெரிய தேசம்; சுமார் 36 லக்ஷம் சதுரமையில் விஸ்தீரணத்தையுடையது. ரெயில்வேக்கள் அதிகரித்து வந்து கொண்டிருந்த போதிலும தேசமுழுவதும் எல்லாவிடங்களையும் ரெயில்வே எட்டுவது வெகு வெகு காலம்செல்லும். கிராமங்களைப் பெரிய பட்டணங்களோடும், துறைமுகங்களோடும், ரெயில்வே அத்துக்களோடும் தொடுக்கவேண்டியது வெகு முக்கியமான விஷயமாகிறது. ரஸ்தாக்கள் நம்முடைய தேசத்தில் போதாமலிருக்கின்றனவென்பது எல்லோரும் அறிந்த விஷயமே. தவிர பட்டணங்களுக்குச் சமீபத்திலுள்ள ரோட்டுகளைத்தவிர மற்றஇடங்களிலுள்ளவைகள் சரியானஸ்திதியில் வைக்கப்படவில்லை. மோட்டார்கள் முதலிய நவீன வண்டிகள் ஓடும்படியான சீரில் அவைகளில்லை. கிராமங்களிற்கு நல்ல ரஸ்தாக்கள் அமைத்தால் கணக்கில்லாத நன்மைகள் கிராம ஜனங்களுககு ஏற்படுமென்பதில்ச் சந்தேகமில்லை.

நம்முடைய தேசத்தில் கிராமங்களுக்கு நல்ல ரஸ்தாக்கள் ஏற்பட்டால், வியவஸாயமும் கிராம ஜனக்கல்வியும் ஓங்கும் என்பதை எல்லோரும் ஒப்புகொள்வார்கள். நல்ல ரஸ்தாக்கள் உண்டானால் கிராம ஜனங்கள் அறுவடையான தான்யங்களைத் தக்க சந்தைகளிலும் [illegible]களிலும் நல்ல விலைகளுக்கு விற்கக்கூடும். கிராம ஜனங்களும் பல ஊர்களின் ஜனங்களின் நாகரீக வழிகளைக் கவனித்துத் தங்களை சீர்திருத்திக் கொள்ள முயலுவார்கள்.

பெரிய சாலைகளிருப்பதோடு ஒவ்வொரு கிராமத்தையும் அவைகளோடு கிளைரோட்டுகள் சம்பந்திக்க வேண்டும். இவ்விதக்கிளைரோட்டுகள் பிரதி கிராமத்திற்கும் ஏற்படவேண்டும்.

டென்மார்க்கு தேசத்தில் ரஸ்தாக்கள் தக்கபடி ஏற்பட்டமையால் தான் அந்த தேசத்தில் வியவஸாயமும் பொது ஜனக்ஷேமமும் உயர்வான நிலையில் அமைந்திருக்கின்றன. அமெரிகாவின் ஐக்கிய நாடுகளில் பிரயாணவஸதிகளும் ரஸ்தாக்களும் சரியானபடி அமைந்திருப்பதால் தான் அந்நாடுகள் வியவஸாயத்திலும் தொழில்களிலும்

மேன்மையடைந்திருக்கின்றன ஐரிஷ் ப்ரீ. ஸ்டேட்டிலும் இவ்வாறே ரோட்டுகளின் அபிவிருத்தி கவனிக்கப்பட்டுவருகின்றன.

நல்ல ரஸ்தாக்களும் பிரயாண வண்டிகளும் ஏற்படுகிறதால் கிராம ஜனங்கள் தங்களுடைய தான்யங்களைத் தக்க இடங்களிற்குக் கொண்டுபோய் விற்க சாதகமாகிறதுடன், அவர்கள் பட்டணங்களிலிருந்து பல நாகரிக வஸ்துக்களை வாங்கிக் கொண்டும் வரக்கூடும். ஆகையால் கிராம ஜனங்களுக்கு மாத்திரம் ரஸ்தாக்களால் சௌகரியங்கள் ஏற்படுகின்றனவென்பதில்லை. பட்டணங்களின் வியாபாரமும் ஓங்குகிறது.

கிராமாந்தரங்களுக்கு ரஸ்தா சௌகரியமும் மோடார் சௌகரியமும் அதிகரித்தால் வியவஸாயச்சரக்குகளை உபயோகப்படுத்தக்கூடிய தொழில்சாலைகள் ஆங்காங்கு உண்டாகும். தொழில்கள் அபிவிருத்தியையடையும். ஏற்கனவே நெல் மில்களும், கரும்பாலைகளும், எண்ணை மில்களும், மர மில்களும் உண்டாயிருப்பதை நாம் காண்கிறோம்.

நல்ல ரஸ்தாக்களும், வண்டிகளு மேற்பட்டால் கிராம ஜனங்கள் தக்க பள்ளிக்கூடங்களுக்குத் தங்களுடைய சிறுவர்களை படிப்பிற்கு அனுப்பக்கூடும்.

மோட்டார் வண்டிகள் அதிகமாக ஏற்பட்டால் கிராம ஜனங்கள் யந்திரங்களை பல வழிகளில் உபயோகிக்க அபிருசியை வளர்க்க ஆரம்பிப்பார்கள்.

## அலமூருவில் நடைபெறும் கிராமச் சீரமைப்பு முயற்சிகள்.

அலமூரு ஸ்தாபனத்தில் அடுத்தடுத்தாப்போலுள்ள 15 கிராமங்களடங்கியிருக்கின்றன. அவைகள் கோதாவரி டெல்டாவில் முக்கியப் பிரதேசத்திலிருக்கின்றன. பொது நன்மைக்கு உழைக்கக்கூடிய திறமைவாய்ந்த நபர்களை அவைகளுடைத்தாயிருக்கின்றன. அவைகளில் ரஸ்தாக்கள் நல்லஸ்திதியிலில்லை: பயிர்முயற்சிகள் அதிகலாபகரமாகவில்லை. ஆரோக்கிய நிலைபும் அவைகளிற் சரிவரயில்லை. ஒவ்வொரு கிராமத்திலும் கூட்டுறவு சங்கமொன்றிருக்கிறது. சில கிராமங்களில் ஒன்றுக்கு மேற்பட்ட சங்கங்களிருக்கின்றன. அவை



களில் மேல் ஜாதியார்களாகிய மிராசுதார்களுக்கொன்றும், ஊழிய ஜாதிகளுக்கு மற்றவைகளுமாக விருக்கின்றன. இவ்வித ஜாதிக் கூட்டுச் சங்கங்கள் 10 வருஷங்களுக்கு முன்னேயே ஏற்படுத்தப்பட்டன. அது முதல் ஸ்ரீமான் ஸத்திய நாராயண அவர்களின் முயற்சிகளால் அவைகள் அபிவிருத்தியையடைந்தன. கூட்டுச் சங்கங்கள் ஏற்படுவதற்கு முன் இந்தக்கிராமங்களின் ஜனங்கள்கடன் வாங்கவேண்டியிருந்தால் சாவுகார்களிடம் அதிக வட்டியின்பேரில் கடன் வாங்க வேண்டியதாக விருந்தது. வியவஸாய முயற்சிகளின் நிமித்தம் கடன் தொகைகள் பிரயோகிக்க வேண்டியிருக்கிறபடியால் இவ்வித அதிக வட்டிக்கடன்களினால் நஷ்டங்கள் ஏற்படக்கூடுமேயொழிய லாபமே ஏற்படாது. கூட்டுச்சங்கங்கள் ஏற்பட்ட பிறகு சுலப வட்டிக்குப் பணம் கிடைத்து வருகிறது. கடன் தொகைகள் தோட்டப்பயிர் முயற்சிகளின் பொருட்டு உபயோகிக்கப்படுகின்றன. கரும்பு சாகுபடி அபிவிருத்தியாகியிருக்கிறது. வாழை, மஞ்சள், காய்கறி இவைகளின் பயிர்களும் அவ்விதமாகவே விருத்தியாகியிருக்கின்றன. முன்னே பயிரூழியர்களாயிருந்தவர்களெல்லாரும் சொந்தப்பயிர் நிலக்காரர்களாக ஆய்விட்டார்கள். கூட்டுறவுசங்கங்கள் நெடுங்கால கெடுக்களையுடைய கடன்களைக் கொடுக்கிறபடியால் அவர்கள் நிலங்களை நெடுங்காலகுத்தகைகளின் பேரில் எடுத்துக் கொண்டு சாகுபடி செய்து நல்ல வரும்படிகளையடைகிறார்கள். இவ்விதமாக நிலங்களை நெடுங்கால குத்தகை ஏற்பாட்டால் எடுத்துக் கொண்டு குடும்பங்களுடன் வெகு சிரத்தையாய் நிலங்களைப்பயிர் செய்து லாபங்களையடைகிறார்கள். கோதாவரி லங்கா நிலங்களை குத்தகைக்கு எடுத்துக்கொண்டு இவைகளில் புகையிலை, பருத்தி, சோளம் முதலியவைகளைப்பயிர் செய்கிறார்கள். தோப்புகளைக்குத்தகைக்கு எடுத்துக்கொண்டு பழ உற்பத்திசெய்துப் பலவிடங்களுக்கு பழங்களை வியாபாரத்திற்கு அனுப்புகிறார்கள். கபிலேசுவரபுரத்தில் 1919 இல் 80 குடும்பங்கள் சொந்த நிலங்களைப்பயிர் செய்கிற குடும்பங்களாயிருந்தன. தற்போதில் 400 குடும்பங்கள் சொந்த நிலங்களைவைத்துக்கொண்டுப்பயிர் செய்கின்றன. சந்தபூடியில் சிறிய வியவஸாயிகள் கூட்டுறவு சங்கங்களிலிருந்து பணத்தை அடைந்து கொண்டு புகை இலை, வெற்றிலை பாக்கு காய்கறி இவைகளை வாங்கிச் சந்தைகளில் விற்று ஜீவனம் செய்கிறார்கள். சிந்தலூருவில் வைத்தியர்

கள் கூட்டுறவு சங்கங்களிலிருந்து பணத்தை வாங்கிக்கொண்டிருந்து களைச்செய்து வியாபாரஞ்செய்கிறார்கள். கூட்டுறவு இயக்கம்பரவுவதால் இந்தக்கிராமங்களில் ஜனங்கள் பொது நல உணர்ச்சியை வஹிக்க ஆரம்பித்திருக்கின்றனர். இலெக்ஷன்களில் அதிக ருசியை வஹிக்கிறார்கள். அலமூருவில் வியவஸாயிகளின் சங்கமொன்று இருக்கிறது. கிராமப்பஞ்சாயத்துகள் கிரந்தசாலைகள் இவைகளெல்லாம் உண்டாயிருக்கின்றன. கூட்டுறவு சங்கங்கள் பொது நன்மைச் சிலவுகளுக்காக கொஞ்சம் லாபபணத்தைப்பகுத்து வைக்கின்றன. இராமச்சந்திரபுரம் தாலூக்காவில் வியாஜ்ஜியங்கள் குறைந்து போய் விட்டன. அலமூருவில் ஒரு ஸ்டோர்சங்கமிருக்கிறது. பெதபல்லியில் ஒரு வீடு கட்டிடக்கூட்டுறவு சங்கமிருக்கிறது. அந்தஸ்டோரில் கதரும், கூட்டுறவு சங்கங்களில் உபயோகத்திற்கு வேண்டிய அச்சுக்காகிதங்களும் கணக்கு புஸ்தகங்களும் தயாரிக்கப்பட்டு விற்கப்படுகின்றன. அது இன்னும் சென்னைத் திருவல்லிக்கேணி அர்பன்கோ ஆபரேடிவ் ஸொஸைடியைப்போல் மளிகைக்கடைச்சரக்குகளில் வியாபாரத்தையும் செய்யப்போகின்றது. நில அடமான பாங்கு ஒன்று ஸ்தாபிக்கப்பட்டிருக்கிறது; அது நன்றாய்வேலை செய்யத்தொடங்கியிருக்கிறது. 40,000 ரூபாய் வரையில் டிபெஞ்சர்களையும் விற்றிருக்கிறது. கிராமப் பஞ்சாயத்து ஒன்றும் ஸ்தாபிக்கப்பட்டிருக்கிறது.

# இந்திய விவசாயம்

ஏழாவது வருடம் நடக்கிறது.

பயிரிடும் முறை, கால்நடை பரிபாலனம், கூட்டுறவு கிருஷிகர் செய்யக்கூடிய சிறு தொழில்கள், முற்போக்கான விவசாய முறைகள், முதலிய பல விஷயங்களைக்கொண்டு வெளிவரும் ஓர் தமிழ்ப் பத்திரிகை.

மானேஜர், இந்திய விவசாயம் ஆபீஸ்,
தெப்பக்குளம் போஸ்ட், திருச்சினாப்பள்ளி.



அநேக கிராமங்களில் குளங்களும் கிணறுகளும் மராமத்து செய்யப்பட்டு சுத்த ஜல வஸதிசரியாக ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. வெகுகாலமாகத்தூர்ந்து கிடந்த ஏரிகள் வெட்டப்பட்டன. அவைகளின் கரைகள் மராமத்துசெய்யபட்டன. அவைகளில் அநேக இடங்களில் படித்துறைகள் கட்டப்பட்டிருக்கின்றன. ஏரிக்கரைகளில் காய் கறிச்செடிகள் பயிர் செய்யப்படுகின்றன. காய் கறிகள் கிராம ஜனங்களுக்கு வேண்டிய அளவுகளில் உண்டாகின்றன. மாடுகளின் உபயோகத்திற்கு குட்டைகள் தனிப்படுத்தப்பட்டு வைக்கப்பட்டிருக்கின்றன. ஆதி ஆந்திரர்கள் வஸிக்கும்பாகங்களில் ஸிமிட்டி போட்ட சுவர்களுடனும் மேடைகளுடனுமுள்ள கிணறுகள் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன.

அலமூரு பிர்காவில் ஒவ்வொருகிராமத்திலும் பள்ளிக்கூடங்களிருக்கின்றன. பெரியகிராமங்களில் ஆண்பிள்ளைகளுக்காகவென்றும், பெண் பிள்ளைகளுக்காகவென்றும் வேறு பள்ளிக்கூடங்களிருக்கின்றன. ஸ்ரீமான் சத்தியநாராயணா அவர்களின் முயற்சிகளால் வெகு பிள்ளைகள் பள்ளிக்கூடங்களிற்குப் போகத்தொடங்கினார்கள். கிராம ஜனங்களும் பிள்ளைகள் பள்ளிக்கூடங்களுக்குச் செல்லவேண்டுமென்பதை நன்றாய் அறிந்தவர்களாயிருக்கிறார்கள். கிராம முன்னேற்ற முயர்ச்சிகளில் சம்பந்தப்பட்ட ஊழியரொருவர் பள்ளிக்கூடங்களில் நந்நடக்கை விஷயங்களில் போதனைகளைச் செய்கிறார்.

கிரந்தசாலைகள் ஆந்திரதேசத்தில் 20 வருஷங்களுக்கு முன்னேயே ஏற்பட்டன. பிறகு கொஞ்சகாலம் வரையில் அவைகள் ஸரிவர நடக்கவில்லை. மூன்று வருஷங்களுக்கு முன்புதான் பஞ்சாயத்து ரிஜிஸ்டிரார் ஜனரலவர்கள் பணஉதவியைச் செய்யத் தொடங்கின பின்பு அவைகள் சரியாய் வேலைசெய்ய ஆரம்பித்திருக்கின்றன. அவைகளை வெகு ஜனங்கள் உபயோகித்து வருகிறார்கள்.

எல்லாமுயர்ச்சிகளுக்கும் வேண்டிய பணங்கள் தாலூகாபோர்டுகளிலிருந்து அல்லது பஞ்சாயத்து ரிஜிஸ்டிரார் ஜனரலவர்களிடமிருந்து அடையப்படுகின்றன. இந்தப்பணங்களுடன் ஸ்ரீமான் சத்தியநாராணா அவர்களும் அவருடன் உழைப்பவர்களும் கிராமங்களில் பலவித மராமத்து வேலைகளின் நிமித்தம் தனிகர்களிடமிருந்து பணங்களை அடைந்து கொள்கிறார்கள். இன்னும் கோலாரம் என்கிற

ஒரு வரியானது தான்யம் அளவிடப்படும்பொழுதெல்லாம் வசூலிக்கப்படுகிறது. பஞ்சாயித்துகள் உண்டாயிருக்கிற கிராமங்களில் மேய்ச்சல் கட்டணங்களின் மூலமாகவும், குட்டைகளில் மீன்குத்தகைகளின் மூலமாகவும் ஏரிக்கரை, புரம்போக்கு இவைகளிலுள்ள தோட்டங்களிலிருந்தும் வரும்படிகள் அடையப்படுகின்றன. பஞ்சாயத்துகளுக்குச் செலவுகளுக்குப்பணம் போதாமல் போனால் பஞ்சாயத்தார்கள் தங்களுடைய ஸொந்த பாத்தியதையின் பேரில் கூட்டுறவு சங்கங்களிலிருந்து கடன்வாங்குகிறார்கள்.

ஒவ்வொரு கிராமத்திலும் ராமமந்திரங்கள் என்று சொல்லப்பட்ட இராமர்கோயில்கள் இருக்கின்றன இக்கோயில்களில் கிரந்தசாலைகளிருக்கின்றன. கூட்டுறவு சங்கங்களின் காரியஸ்தலங்களும் அவைகளில் இருக்கின்றன. கூட்டுறவு சங்கங்களின் மீடிங்குகள் அவைகளில் நடத்தப்படுகின்றன. பொதுவிஷயங்களைப் பற்றி மீடிங்குகளும் அவைகளில் நடத்தப்படுகின்றன. பஞ்சாயத்துகளின் மீடிங்குகளும் அவைகளில் நடத்தப்படுகின்றன. பஜனைகளும் அவைகளில் கிராமத்தவர்களால் நடத்தப்படுகின்றன.

கிராமஜனங்கள் 3. 4 வருஷங்களிற்கு முன்குடிகாரர்களாகவும் சூதாடுகிறவர்களாகவுமிருந்தார்கள். இபபொழுது குடிக்கிறவர்களே இல்லை.

அலமூரு கிராமச் சீர்அமைப்பு முயர்ச்சி ஸ்தாபனமானது விவஸாய இலாகாவிலிருந்து ஒரு சினைக்காளையை வாங்கிவைத்துக்கொண்டிருக்கிறது. அந்தகாளையானது கிராமங்களில் மாடுகளை சினைப்படுத்துவதற்கு உபயோகிக்கப்படுகிறது.

மேற்சொல்லிய அலமூருகிராமச் சீரமைப்பு ஸ்தாபனத்தின் முயர்ச்சிகள் புகழத்தக்கவை. ஸ்ரீமான் சத்தியநாராயணா அவர்களின் ஊழியமும் தேசபக்தியும் வெகுஉயர்ந்தவை. தமிழ்நாட்டில் மேற்கூறிய விதமாக கிராமச்சீரமைப்பு முயர்ச்சிகள் எக்காலத்தில் உண்டாகுமோ தெரியவில்லை. தமிழ்நாட்டு தேசாபிமானிகள் ஆந்திர ஸஹோதரர்களைப்போல் பொது ஜன ஊழியவழிகளிலும், தேசோத்தாரண வழிகளிலும் சிரத்தையை வஹிக்கிறதில்லை. தமிழ் நாட்டில் தேசபக்தி உற்சாகம் வெகுகுறைவாயிருக்கிறது. அவரவர் தங்களுடைய ஸொந்தலாபத்திற்காக மாத்திரம் முயர்ச்சிசெய்கிறார்களே யொழிய பொது நன்மைக்கு உழைப்பாரில்லை. ஸ்ரீமான் ஸத்திய நாராயணாவைப்போல பலதேச ஊழியர்கள் அந்தந்தநாட்டில் தோன்றி கிராமச்சீரமைப்பு வழிகளில் பிரச்சாரங்களையும முயர்ச்சிகளையும் செய்தாலொழிய தமிழ்நாடு அபிவிருத்தியை யடையாது.



## வர்த்தமானக்குறிப்பு

கோஷன்பிரபு இராஜப்பிரதிநிதி ஸ்தானத்தை யடைந்திருக்கிறார். இவர் நமது மாஹாண கவர்னராக விருந்தகாலத்தில் வெகு நன்மைகளைச் செய்திருக்கிறார். நமது மாஹாணத்தின் அபிவிருத்தியில் மிகுந்த கவனத்தைச் செலுத்திவந்தார். விவஸாயமும் விவஸாயிகளும் அபிவிருத்தியாக வேண்டுமென்று இடைவிடாமல் முயர்ச்சிகளைக் கைக்கொண்டார். ராயல் கமிஷன் வந்தபோது அவர்மாஹாண அட்வைஸரிபோர்டு ஒன்றை அக்கமிஷனுக்கு ஒத்தாசை செய்வதற்காக ஏற்படுத்தினார். கோஷன்பிரபு பாரொஸ்டு பஞ்சாயத்துகளின் அபிவிருத்தி விஷயத்தில் ருசியை வஹித்தார் இரண்டாவது பாரொஸ்டு பஞ்சாயத்தார் கண்டரன் வலிற்கு விஜயம்செய்து அம்மஹாநாட்டை திறந்தார். அந்தஸந்தர்பத்தில் அவர் செய்த உபந்நியாஸத்தில் அவருக்கு பாரொஸ்டுப் பஞ்சாயத்துகளின் அபிவிருத்தியில் இருந்த அபிருசிநன்றாய் அறியப்பட்டது.

கோஷன் அவருடையமனையாகிய லேடி கோஷன் அவர்களும் நமது மாஹாணத்திய அபிவிருத்தி இயக்கங்களில் ஸம்மந்தப்பட்டிருந்தார். நம்முடைய மாஹாணத்திய ஜனங்கள் எக்காலத்திற்கும் இவர்களை மறக்கமாட்டார்கள்.

கனம், ஸர் முகம்மத் ஹபிபுல்லா ஸாஹிப் பஹதூர் கே. ஸீ. எஸ். ஐ. அவர்கள் லீக் ஆப் நேஷன்கு என்கிற உலகத்திய தேசங்களின் பொதுச்சபைக்கு இந்தியப்பிரதிநிதிகளின் தலைவராகச்செல்லுகிறார். இவ்வருஷத்தில்தான் முதல் முதலாக இந்தியரொருவர் தலைமை வஹிக்கிறார். ஸர ஹபிபுல்லா அவர்கள் மிகுந்த அநுபவம்வாய்ந்தவர். இந்திய விஷயங்களில் சிறந்தயோசனைகளை யுடையவர். இர்வின் பிரபு இவரை இவ்வேலைக்கு நியமித்தது இந்திய ஜனங்களுக்கெல்லாம் திருப்தியை உண்டாக்கக்கூடியது.

மைசூர் சமஸ்தானத்தில் கிராமக்கல்விபோதனை முறையொன்று

தயாரிக்கப்பட்டிருக்கிறது. கிராமாந்தரங்களிலுள்ள மத்தியதர பள்ளிக்கூடங்களில் அது அநுஷ்டிக்கப்பட வேண்டுமாம். ஸ்ரீமான் எ. வேதாசலஐயர் அவர்கள் அம்முறை நமது மாஹாணத்திலும் பள்ளிக்கூடங்களில் அநுஷ்டிக்கப் படவேண்டுமென்று கூறுகிறார். அவர்சொல்வதாவது :—

எந்தெந்தப் பிரதேசத்தில் எந்தத்தொழில் பிரபலமாய் அநுஷ்டிக்கபடுகிறதோ அத்தொழில் சம்பந்தமாக கல்விமுறை அப்பிரதேசப்பள்ளிக்கூடங்களில் அநுஷ்டிக்கபட வேண்டும். வியவஸாய ருசியை அதிகமாக உண்டாக்கக்கூடிய விஷயங்களில் போதனைகள் எல்லாப் பள்ளிக்கூடங்களிலும் கட்டாயமாக நடத்தப்படவேண்டும். வியவஸாய இலாகாவின்தலைவரும் கல்வி இலாகவின்தலைவரும் கலந்து யோசித்து கிராமக்கல்வி விஷயங்களின் சம்பந்தமாக போதனை முறையொன்றை ஏற்படுத்த வேண்டும். உபாத்யாயர்கள் கிராமக்கல்வி போதனைகளை நடத்த சக்தியுள்ளவர்களாக விருக்கவேண்டும்.

பட்டணங்களில் உத்தியான வனங்கள் உண்டாக்கப்பட வேண்டும். உத்தியானவனங்களில் பட்டண ஜனங்கள் சென்று விச்ராந்தியையடைவார்கள். பட்டண ஜனங்கள் அடிக்கடி காட்டுப்புறங்களிற்கும் போயிருந்துவந்தாலும் நல்லது.

அநேக ஈக்கள் உபவியாதிகளின் மூலங்களை வஹிக்கின்றன. விஷஜுரம் சீதபேதி வயிரெடுப்பு, க்ஷயம் முதலிய நோய்களின் மூலங்களை ஈக்கள் வஹிக்கின்றன. இவைகள் ஆயிரக்கணக்கான முட்டைகளை யிட்டு தினம் இரண்டுதடவை குஞ்சு பொரிக்கின்றன. லாயங்களிலும், மாட்டுக் கொட்டில்களிலும், எருக்குப்பல்களிலும் முட்டைகள் இடப்பட்டு குஞ்சுபொரிக்கப்படுகின்றன. பால்வைக்கப்பட்ட பாத்திரத்தையும், ரொட்டித்துண்டுமுதலியவைகளை ஈக்கள் முக்கியமாய் நாடுகின்றன. ஈயானது உணவில் உட்கார்ந்தால் அவ்வுணவை புசிக்கக்கூடாது. அநேகவீடுகளின் அடுப்பங்கரைகளிலும், சிற்றுண்டி சாலைகளிலும், மளிகைக்கடைகளிலும் ஈக்கள் மேய்ந்துகொண்டிருப்பதை நாம் காண்கிறோம்.



## மாமிச உணவு
### அதன் கேடுகள்

மனிதன் உயிர் வாழவேண்டியதற்கு அவசியமான எல்லா உணவுபொருள்களும் சாக பதார்தங்களிலேயே மிகுதியாகவும் சுத்தமாகவும் கிடைக்கின்றன. எந்தப் பிராணியினுடைய மாமிசத்தை மனிதன் உண்கிறானோ அந்தப் பிராணி தன்னுடைய ஆஹாரத்தை சாக பதார்த்தங்களினின்று பெறுகின்றன.

மாமிசம் கொடிய வியாதிகளான பிளவை, சுரம், க்ஷய ரோகம், குஷ்டம், வாதரோகம், பாரிசவாயு, குடல்புழுக்கள் முதலியவற்றிற்குக் காரணமா யிருக்கின்றது என்றும் நூற்றுக்குத் தொண்ணூற்றென்பது பேர்களைக் கொல்கின்ற வியாதிகளுக்கு. முக்கிய காரணங்களில் மாமிசமும் ஒன்று என்பதில் சிறிதும் சந்தேகமில்லை என்றும் டாக்டர் ஜோஷையா ஓல்ட்பீல்ட் கூறுகின்றார்

மாமிசம் உண்கிறவனுடைய இருதயம், மாமிசம் உண்ணாதவனுடைய இருதயத்தை விட ஒருநாளைக்கு 20,000 தடவைகள அதிகமாக அடிப்பதாகவும், மாமிசம் உண்கிறவனுடைய தேகம் சீக்கிரத்தில் தளர்ச்சி யடைந்து மரணத்திற்கு ஆளாவதாகவும் ஜெ. ஹெறான் என்பவர் கூறுகின்றார்

மாமிச உணவு சாக பதார்த்தத்தை விடப் பத்து மடங்கு அதிக விலையுள்ளது என்று பிராம்வெல் தெரிவிக்கிறார். ஒரு குடும்பத்திற்குப் பத்தணாவுக்கு மாமிசம் வாங்க வேண்டியதானால் ஒரு அணாவுக்கு மரக்கறி வாங்கினால் போதுமானது. நம்தேசத்தின் வறுமைக்கு முக்கியமான காரணங்களில் புலால்உண்பது ஒன்று. (லோ-ரி)

## நரகம் இல்லை

ஓரரசாலும் வேம்பும்
    ஒருபத்துப் புளியும் மூன்றும்
சீருடன்விளாவும்வில்வம்
    மூன்றுடன் சிறந்த செல்லி
பேர்பெறும் ஐந்து தேங்காய்
    பெருகு மா ஐந்தும் என்றும்
யார் பயிர் செய்தாரேனும்
    அவர்க் கில்லை நரகந் தானே.

ஒவ்வொரு மனிதனும் கார்த்திகை மாதம் சுக்ல பட்சத்தில் ஒரு அரசு ஒரு ஆல், வேப்பு. மூன்று வில்வம், மூன்று விளாம், மூன்று நெல்லி, பத்துப் புளி, ஐந்து மா, ஐந்து தென்னை ஆகிய இவ்வொன்பது வித புண்ணிய மரங்களை வைத்துக் காப்பாற்றினால் நரகம் இல்லையென்றும் இவ்வாறே வருஷா வருஷம் நட்டுக் காபபாற்ற வேண்டுமென்று நீதிசாரமும், கார்த்திகைப்புராணமும் தெரிவிக்கிறது. (லோக பகாரி)


குறைந்த சந்தாவில் நிறைந்த விஷயங்கள்
வெளிவரும் பத்திரிகை எது ?

# கலைமகள்

(ஓர் இனிய செந்தமிழ் மாதப் பத்திரிகை)

அன்பின் மிக்க சகோதர சகோதரிகாள்!

தேச நலத்தையும், மதாபி விருத்தியையும், பாஷாபிமானத்தையும் கருதியுழைக்கும் தேசீய மணம் கமழும் சிறந்த மாதப் பத்திரிகை இதுவொன்றே! இப்பத்திரிகையில் அரிய விடாசங்கள், இனிய நாவல்கள், நவீன நாடகங்கள், நீதி நூல்கள், செவிக்கினிய செய்யுட்கள், விடுகதைகள், விநோதக்கூற்றுகள், உலக வர்த்தமானங்கள், பிறபாஷைகளில் உள்ள அரிய விஷயங்களின் மொழிபெயர்ப்பு முதலியன இனிய எளிய தமிழில் வெளியாகும். ஒவ்வொரு ஆடவரும், பெண்டிரும், சிறுவரும், சிறுமியரும் சந்தா தாரராகச் சேருங்கள்! கலைமகளைப் படித்து கல்வி, கேள்வி, ஒழுக்கங்களிற் சிறந்து விளங்குங்கள்!

சந்தா விபரம்: ஒரு வருடத்திற்கு தபாற் செலவுடன் இந்தியா, பர்மா, சிலோன் முதலிய விடங்கட்கு அணா-12· பினாங்கு, சிங்கப்பூர் முதலிய விடங்கட்கு ரூ 1.

தனிக்காப்பி 1-க்கு அணா 0-1-6

மானேஜர்:- "கலைமகள்" ஆபீஸ்,

64. முள்ளாசாயபு வீதி, சௌகார்பேட்டை, சென்னை.



## எம்மிடம் வாங்கிப் பாருங்கள்

நாணயம், சொல்தவறாமல் செய்து கொடுத்தல், சரியான
நகைகள், கெம்புகள், வைரங்கள் இவைகளை நீர்
நாடு வீரானால் எம்மிடம் ஒரு தடவை
வாங்கிப்பார்த்தால், நாம் செய்கிற
வகாயத்தைப்பற்றிநீர் அதிக
திருப்தியை யடைவீர்
என் பதில் சந்
தேகமே
இல்லை.

## எங்களுடைய கரூர் விலை

உங்களுக்கு திருப்தியையே கொடுக்கும். வீடுகளில்
உபயோகிக்கக் கூடியவையும், விசேஷகாலங்
களில் வெகுமதியாக கொடுக்க யோக்ய
தையான வெள்ளிப்பாத்திரங்களையும்
நாங்கள் நல்ல வேலைக்காரர்களை
வைத்துக்கொண்டு செய்
கிறோம் ஒரே-தடவை
எம்மை பரீக்ஷித்து
பாருங்கள்.

ஸூராஜ் மல் லல்லுபாய் அண்டு கோ.,
கீர்த்தி பெற்ற வைர வியாபாரிகள்,

13 எஸ்பிளனேட் : : : : மதராஸ்.

# "கிராம அபிவிருத்தி" (ரூரல் இந்தியா) பஞ்சாங்கம்

சுக்கில ஹு ஆவணிமீ

இங்கிலீஷ் 1924ம் ஹு ஆகஸ்டு—செப்டம்பர் மீ

| ஆகஸ்டு | ஆவணி | வாரம் | திதி | | நக்ஷத்திரம் | | யோகம் | | விசேஷங்கள் |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 16 | 1 | வெ | ஏகா | 3-28 | மூல | 10-25 | அ | 10-25பி | வரலக்ஷ்மி விரதம் |
| 17 | 2 | ச | துவா | 9-28 | பூரா | 17-43 | சி | 60 | பிரதோஷம், கரிநாள் |
| 18 | 3 | ஞா | திர | 14-50 | உத்ரா | 24-25 | அ | 60 | சர்வமுகூர்த்தம் |
| 19 | 4 | தி | சதுO | 19-23 | திரு | 30-18 | அ | 30-18சி | பௌர்ணமி ரிக்உபாகர்மம் |
| 20 | 5 | செ | பௌ | 22-58 | அவி | 35-18 | சி | 35-13ம | யெஜுர் வேத உபாகர்மம் |
| 21 | 6 | பு | பிர | 25-30 | சத | 39-10 | சி | 39-10அ | காயத்திரீ ஜபம் |
| 22 | 7 | வி | துவி | 27-10 | பூர | 42-15 | சி | 60 | மாடுகொள்ள |
| 23 | 8 | வெ | திரு | 27-58 | உத்ரட் | 44-28 | சி | 44-23அ | வித்யாரம்பம் |
| 24 | 9 | ச | சது | 27-38 | ரே | 45-35 | ம | 45-35சி | கரிநாள், |
| 25 | 10 | ஞா | பஞ் | 26-20 | அச்வ | 45-45 | சி | 30 | விவாஹம், பும்ஸவனம் |
| 26 | 11 | தி | ஷஷ் | 24-5 | பர | 45-10 | சி | 45-10ம | |
| 27 | 12 | செ | சப் | 20-45 | * கிரு | 43-8 | சி | 43-8 அ | கிருத்திகை, |
| 28 | 13 | பு | அஷ் | 16-23 | ரோ | 40-13 | சி | 60 | கிருஷ்ண ஜயந்தி, மழை |
| 29 | 14 | வி | நவ | 10-58 | மிரு | 36-20 | ம | 60 | |
| 30 | 15 | வெ | தச<br>ஏகா | 4-35<br>57-38 | திருவா | 31-35 | சி | 60 | ஸ்மார்த்த ஏகாதசி |
| 31 | 16 | ச | துவா | 50-10 | புன | 26-15 | சி | 60 | வைஷ்ணவ ஏகாதசி |
| 1 | 17 | ஞா | திரயோ | 42-30 | பூச | 20-38 | சி | 60 | பிரதோஷம் மாசசிவராத்திரி |
| 2 | 18 | தி | சதி | 35-38 | அபி | 15-0 | சி | 15ம | நவ கிரஹசாந்தி செய்ய |
| 3 | 19 | செ | அமா ● | 28-13 | மகம் | 9-55 | சி | 60 | ஸர்வத்ர அமாவாஸை |
| 4 | 20 | பு | பிர | 22-28 | பூரம் | 5-38 | அ | 60 | |
| 5 | 21 | வி | துவி | 18-5 | உத்தி | 2-38 | ம | 2-38சி | சாமவேத உபாகர்மம் |
| 6 | 22 | வெ | திரு | 14-48 | அஸ் | 1-30 | அ | 1-20சி | விநாயக சதுர்த்தி |
| 7 | 23 | ச | சது | 14-38 | சித் | 1-48 | ம | 1-48அ | விநாயகசதுர்த்தி |
| 8 | 24 | ஞா | பஞ் | 15-48 | சுவா | 4-18 | சி | 4-48ம | ஷஷ்டி |
| 9 | 25 | தி | ஷஷ் | 18-20 | விசா | 8-35 | ம | 8-35சி | |
| 10 | 26 | செ | சப் | 23-15 | அனு | 14-25 | சி | 14-25ம | தூர்வாஷ்டமி |
| 11 | 27 | பு | அஷ் | 28-38 | கே | 21-20 | சி | 21-20ம | |
| 12 | 28 | வி | நவ | 35-15 | மூல | 28-48 | சி | 60 | கரிநாள் |
| 13 | 29 | வெ | தச | 41-13 | பூரா | 36-13 | பி | 36-13சி | |
| 14 | 30 | ச | ஏகா | 46-35 | உத் | 43-0 | சி | 60 | ஏகாதசி |
| 15 | 31 | ஞா | துவா | 53-10 | திரு | 48-53 | அ | 48-53ம | கப்கி துவாதசி |

199384

# SADHANA
# AUSADHALAYA
## DACCA (Bengal)

**—ADHYAKHA—**

**Joges Chandra Ghose,** M. A. F. C. S. (London)

*Formerly Professor of Chemistry, Bhagalpur College.*

மிகவும் சுத்தமான ஆயுர்வேத ஔஷதங்கள் கிடைக்கும், வேண்டுவோருக்கு விலைப்பட்டி இனமாக அனுப்பப்படும். வியாதியின் விவரத்தை தெரிவித்தால் இனமாக மருந்துபட்டி அனுப்பப்படும்.

மகரத்வஜம் (சுவர்ணஸிந்தூரம்)

அசல் தங்கத்துடன் ஒருசேர் ... ரூ 4 0 0

இது எல்லா வியாதிகளுக்கும் கைகண்டமருந்து, பித்தம் வாதம் முதலிய வியாதிகளைப் போக்குவதுடன் ரத்தசுத்திக்கும் ஏற்றது.

சரிபாடி ஸர்ஸா.

இது மூல ரோக ஸம்பந்தமான வியாதிகளுக்கெல்லாம் ஸரியான மருந்து.

விலை ஒருசேர் ரூ 3 0 0

சுக்ர ஸஞ்சீவி

இது வீர்யக்குறைவு, அபோகத்தன்மை, சுவப்னஸ்கிதம் முதலிய வியாதிகளுக்கு அமிர்தம் போன்ற மருந்து.

விலை சேர் 1க்கு ரூ 16 0 0

அபல பந்தப ஜகா.

இது ஸ்திரீகளுக்கு உண்டாகும், இடுப்புநோய் முதுகுவலி கர்பப்பை வியாதி அகாலமாதவிடாய் முதலிய கொடும் வியாதிகளைப் போக்கும் 16 டோஸ் ரூ. 2. 50 டோஸ் ரூ 5

# அம்ருதாஞ்சனம்

என்றாலென்ன ?

தலைநோய், பக்க நோய், இல் நோய்,

கன்ன நோய், கழுத்து நோய், ஒற்றைத்தலை நோய்,

வாய்வு நோய், முதுகு நோய், பல் நோய், மூலசங்கை,

சுளுக்கு, காயம், தேள், பூரான்,

பக்ஷவாதம், சைத்யம்




சளுப்பு, மார்சளி

உப்பசம், மார்மூச்சு

கழுத்து சளி, ரத்தம் விழுதல்

சந்திவாய்வு, சீழ் விழுதல்,

சுண்டு, பேன், முகப்பருவு, வீக்கம்,

நோய், செகப்பு, தத்துகள், படை,

சிறங்கு, தெனவு, எரிச்சல், இது

அது என்று சொல்வதேன் ?

எல்லா நோய்களையும்,

பாதைகளையும்,

போக்கும் ! போக்கும்!! போக்கும்!!!

மூன்று விசைகளிலும் போக்கும்.

அமிர்தாஞ்சனம் டிபோ

பம்பாய் & மதராஸ்.


ublished by Mr. *A. Rajagopala Reddi*, President, Forest Panchayatdars' Union Ltd. Madras
*Printed by Mr. T. E. V. SARMA AT THE MAGAZINE PRESS*
*CHINGLEPUT.*